දුරකථන ) 0112669192 , 0112675011
தொலைபேசி ) 0112698507 , 0112694033
Telephone ) 0112675449 , 0112675280

ෆැක්ස් ) 0112693866
பெக்ஸ் ) 0112693869
Fax ) 0112692913

විද්‍යුත් තැපෑල ) postmaster@health.gov.lk
மின்னஞ்சல் முகவரி )
e-mail )

වෙබ් අඩවිය : www.health.gov.lk
இணையத்தளம்
website

සුවසිරිපාය
சுவசிரிபாய
SUWASIRIPAYA

මගේ අංකය
எனது இல
My No. NCD [illegible]

ඔබේ අංකය
உமது இல
Your No.

දිනය
திகதி
Date 23 [illegible]

# සෞඛ්‍ය අමාත්‍යාංශය
# சுகாதார அமைச்சு
# Ministry of Health

---

பொது சுற்றுநிருபம்: 01 /39 /2020

அனைத்து மாகாண பொதுச் செயலாளர்கள்/மாகாண சுகாதார செயலாளர்கள்,

மாகாண/பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர்கள்,

போதனா வைத்தியாசாலைகள்/மாகாண பொது வைத்தியசாலைகள் /

மாவட்ட பொது வைத்தியசாலைகளின் பணிப்பாளர்கள்,

தள வைத்தியசாலைகளின் மருத்துவ அத்தியட்சகர்கள்,

திணைக்களத் தலைவர்கள்,

## தேசிய விஷத் தடுப்பு வாரம் - 19 முதல் 25 ஒக்டோபர் 2020 வரை

"விஷம் கொண்ட விலங்குகள் மற்றும் கடித்தல் கொட்டுதலுக்கான முதலுதவி"

தேசிய சுகாதாரப் புள்ளிவிபரங்களின் படி, இலங்கையில் தற்போது விஷம் கொண்ட விலங்குகளால் கடிக்கப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்படுவதற்கு பொதுவான காரணியாக பாம்பு கடித்தல் காணப்படுகின்றது.

அத்தோடு, ஆர்த்ரோபோட்கள் கொட்டுதல் மற்றும் கடித்தல் அதிக எண்ணிக்கையானோர் வைத்தியசாலையில் அனுமதிப்பதற்கு காரணமாக அமையும் பொதுவான சுற்றுச்சூழல் அபாயமாகக் காணப்படுகின்றது. ஹைமனேப்டெரா (குளவி மற்றும் தேனீ), பூரான், சிலந்திகள் மற்றும் தேள் என்பன இதில் உள்ளடங்கும். பெரும்பாலான சம்பவங்கள் நுவரெலியா, கண்டி, பொலன்னறுவை, வவுனியா, அநுராதபுரம் மாவட்டங்களில் பதிவாகியுள்ளன. அன்மையில் யாழ்ப்பாண தீபகற்பத்தில் அதிக எண்ணிக்கையிலான இறப்புக்கள் வெள்ளைத் தேள் (*Hottentotta tumulus*) காரணமாக பதிவாகியுள்ளன. இருப்பினும் இந்த கடித்தல் மற்றும் கொட்டுதல்களின் தொற்றுநோயியல் மற்றும் மருத்துவ அம்சங்கள் இலங்கையில் நன்கு அறியப்படவில்லை.

விஷம் மிக்க இந்த விலங்குகளின் கடித்தல்களுக்கு அப்பால், யாழ்ப்பாணம், புத்தளம், காலி மற்றும் கொழும்பு மாவட்டங்களின் கரையோரங்களில் கடல் விலங்குகளால் நச்சுப்பாய்ச்சல் செயற்பாடுகள் பதிவாகியுள்ளன.

இந்த அம்சங்களைக் கருத்திற் கொண்டு, விஷம் மிக்க விலங்குகளால் கடிக்கப்பட்டு இறத்தல் மற்றும் மருத்துவமனையில் அனுமதிக்கப்படல் என்பவற்றை குறைப்பதற்காக பரந்த அளவிலான தேசிய திட்டம் ஒன்றை உருவாக்குதல் மிக இன்றியமையாததாகும்.

---

385, පූජ්‍ය බද්දේගම විමලවංශ හිමි මාවත, කොළඹ 10. 385,வணக்கத்துக்குரிய பத்தேகம விமலவங்ச தேரோ மாவத்தை, கொழும்பு 10.
385, Rev. Baddegama Wimalawansa Thero Mawatha, Colombo 10, Sri Lanka.

இந்த இலக்கை அடைவதற்காக தேசிய விஷம் சார் தகவல் நிலையமானது தேசிய காயங்கள் த...
குழுவோடு இணைந்து விஷத் தடுப்பு வாரத்தின் போது ஒரு நிகழ்ச்சியைத் திட்டமிட்டுள்ளது.

திட்டமிடப்பட்டுள்ள திகதி : 19 முதல் 25 ஒக்டோபர் 2020 வரை

கருப்பொருள் : விஷம் கொண்ட விலங்குகள் மற்றும் கடித்தல் கொட்டுதலுக்கான முதலுதவி

இந்த வருடத்தில் செய்யத் திட்டமிடப்பட்டுள்ள செயற்பாடுகள் பின்வருமாறு :

இலக்குகள் :

1. விஷம் கொண்ட விலங்குகள் கடிப்பதால் ஏற்படும் இறப்புக்களம் மற்றும் வைத்தியசாலையில் அனுமதித்தல் போன்றவற்றைக் குறைத்தல்
2. அனைத்து அதிகாரிகளுக்கும் தேசிய விஷம் சார் தகவல் நிலையத்தின் இந்த செயற்பாடுகளை இந்த குறித்த வாரத்தில் செய்வதற்காக தகவல் அறிவித்தல்.
3. விஷம் கொண்ட விலங்குகள் கடிப்பதைக் குறைப்பதற்கான முறைகள் மற்றும் அவற்றின் முக்கியத்துவம் தொடர்பாக பொது மக்களுக்கு தெளிவுபடுத்தல்.

முன்மொழியப்பட்டுள்ள செயற்பாடுகள் :

1. ஊழியர்களுக்கும் பொதுமக்களுக்கும் தெளவூட்டுவதற்கான ஓர் செயற் திட்டத்தினை தயாரபடுத்... உதாரணமாக சுகாதார அறிவு வழங்கும் விரிவுரைகள், கண்காட்சிகள், துண்டுப்பிரசுரங்க... விநியோகித்தல் மற்றும் பதாகைகள் காட்சிப்படுத்தல்.
2. சுற்றுநிருபத்திற்கு அமைய சுகாதார ஊழியர்கள் மற்றும் பொது மக்களை விழிப்புண... நிகழ்ச்சிகளை நாடளாவிய ரீதியில் நடாத்துதல்.
3. விஷத் தடுப்பு வாரத்தின் போது, பொருத்தமான பதாகைகளை பொதுமக்கள் மற்றும் சுகா... ஊழியர்களுக்கு விழிப்புணர்வூட்டும் வண்ணம் பொருத்தமான பதாகைகளை நிறுவனங்களில் காட்சிப்படுத்தல்.

உங்களுக்கு மேலதிக தகவல்கள் மற்றும் தொழிநுட்ப உதவிகள் தேவைப்படின் இலங்கை தே... வைத்தியசாலை கொழும்பில் அமைந்துள்ள தேசிய விஷம் சார் தகவல் நிலையத்தை 011-2686143 ... 2691111 நீடிப்பு இலக்கம் 2430) தொடர்புகொள்ள முடியும்.

இந்த சுற்றுநிருபத்தினை அனைத்து ஊழியர்களுக்கும் அறியத்தருவதோடு மேற்குறிப்பிட்ட அம்சங்க... நடைமுறைப்படுத்தப்படுவதனை உறுதிசெய்யுமாறும் கேட்டுக்கொள்ளப்படுகின்றீர். நிறுவனத்தில் நடாத்தப்ப... செயற்பாடுகள் தொடர்பான அறிக்கை, பணிப்பாளர் / தொற்றா நோய்கள், சுகாதார அமைச்சுக்கு 31 நவ... 2020 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னராக அனுப்பப்படவேண்டும்.

மேற்குறிப்பிடப்பட்டுள்ள செயற்பாடுகள் ஒக்டோபர் 2020 முழுவதும் செய்யப்படலாம்.

Dr. S. H. Munasinghe
Secretary
Ministry of Health
"Suwasiripaya"
385, Rev. Baddegama Wimalawansa Thero Mawatha
Colombo ...

வைத்தியர் S.H. முனசிங்க
செயலாளர்
சுகாதார அமைச்சு